1975 நவம்பர் 6]

கமிட்டியில் இடம் பெற வைப்பது பற்றி மாண்புமிகு திரு. ராஜா சிபாரிசு செய்து தான் போட வேண்டிய அவசியம் இல்லை. திரு. வீராசாமி அவர்கள் இங்கு இருப்பதால் அவர்களே வேண்டுகோள் விடுக்கலாம்.

கலைமாமணி பட்டம் பெற்றவர்கள்.

* 210 வினா—**திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் 'கலைமாமணி' பட்டம் பெறுவோர்க்கு ரொக்கப்பரிசு வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றதா ?

(இ) ஆம் எனில், இதுவரை அப்படி வழங்கப்பட்டவர்களின் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இதுவரை கீழ்க்கண்ட பத்து பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் பெயர்கள் :—

1. திருமதி எம். எஸ். திரௌபதி (நடிகை)
2. திரு. நாரண துரைக்கண்ணன் (நாடக ஆசிரியர்)
3. திருமதி எஸ். ஆர். ஜானகி (நாடக நடிகை)
4. திரு. டி. என். சுப்ரமணிய பாகவதர் (ஹரிகதா வித்வான்)
5. திரு. மன்னார்குடி நடேசபிள்ளை (மொகர்சிங்)
6. திரு. இராகவ வாத்தியார் (மதுரை) (நாடக பாடலாசிரியர்)
7. திரு. ஓ. என். கிட்டு (நாடக நடிகர்)
8. திரு. சிவஞான பாண்டியன் (தெருக்கூத்து)
9. திரு. பி. ஐ. நடேசபிள்ளை (சென்னை நாதசுர வித்வான்)
10. திரு. சி. தங்கையா (செல்வல்குளம், வில்லுப்பாட்டு)

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நலிந்திருக்கிற கலைஞர்களுக்கு கலைமாமணி பட்டத்தோடு ரொக்கப் பரிசு கொடுத்த வகையில் பத்துப் பெயர்களை அமைச்சர் அவர்கள்

சொன்னார்கள். இவர்களோடு இந்த நாடகத் துறை, நாதஸ்வரக் கலைத்துறை, இலக்கியத் துறையில் ஏற்கனவே ஈடுபட்டு புகழ் வாய்ந்த கலைஞர்கள் இப்போது நலிந்துள்ளார்கள்; அவர்களுக்கு இயல் இசை நாடகமன்றம் மூலம் இந்தப் பரிசுத் தொகையை அளிப்பதற்கு அரசு ஆராய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கலைஞர்களில் வயதாகி வறுமையில் வாடுகிறவர்களுக்கு மாதம் ரூ. 75 முதல் 100 என்ற அளவுக்கு பென்ஷன் வழங்குவது என்ற முறையில் 500 பேருக்கு நாம் தனியாக வழங்குகிறோம். அதைத் தவிர, அந்தந்தத் துறைகளில் இருக்கிற சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் ஒவ்வொரு துறையிலும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு கலைமாமணிப் பட்டத்தையும் வழங்கி பொற்பதக்கம் வழங்கி, சான்றிதழ் வழங்குகிற நிகழ்ச்சி தொடர்ந்து 15 ஆண்டுகளாக நடைபெறுகின்றது. இதுவரையில் 352 கலைஞர்கள் கலைமாமணி பட்டம் பெற்று, பொற்பதக்கம் பெற்றுள்ளனர். கலைமாமணி என்று பட்டம் பெற்றவர்கள், அதன் பிறகு, மேலும் வறுமையில் ஆழ்ந்திருந்தால், ஓரளவுக்கு அவர்களை ஊக்குவிக்க, சென்ற ஆண்டு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அவர்களில் ஆண்டுதோறும் 10 பேரைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொருவருக்கும் ஆயிரம் பொற்கிழி கொடுக்க வேண்டுமென்று முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதுபோல் ஒவ்வொரு ஆண்டும் பத்து பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொற்கிழி வழங்கப்பட்டு வருகிறார்கள். அதற்கென்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்கள் முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 1 லட்சம் வைப்பு நிதியாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலிருந்து ஆண்டுதோறும் பத்தாயிரம் ரூபாய் வட்டி கிடைக்கும். 10 கலைஞர்களுக்கு ஆயிரம் ரூபாய் விதம்—தொடர்ந்து வருகிற ஆண்டுகளிலும் தர ஏற்பாடு செய்யப்பட்டு சென்ற ஆண்டு தொடங்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு பத்து கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. எஸ். வடிவேல்: கலைமாமணி என்ற பட்டத்தை யாருக்கு வழங்குவது என்பதை ஒரு குழு அமைத்து பரிசீலித்து சிபார்சு செய்கிறதா? அல்லது அரசாங்கமே நேரடியாகப் பரிசீலிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இயல், இசை, நாடகம் என்பதாக மூன்றுதுறை வல்லுநர்களையும் இணைத்து ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அவர்கள் கலைமாமணி பட்டம் பெறுவதற்குத் தகுதி உடையவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்—புகழ் பெற்றவர்களாக இருக்க வேண்டும்—வயதானவர்களாக இருக்க வேண்டும்—வறுமை உடையவர்களாக இருக்க வேண்டும். ஆண்டுதோறும்—இவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற 10 பேர்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : கலைமாமணிப் பட்டம் பெற்றவர்களுக்கு பொற்கிழி வழங்குவதுபோல—மேல்நாடுகளில் பாடுகிற கலைஞர்களது குரலையே இன்ஷூர் செய்கிறார்களே, அதன்மூலம் அவரது குரல் நயம் குறைந்து, மூப்படைகிறபோது கணிசமான தொகை இன்ஷூரன்ஸ் மூலம் கிடைக்க வழி செய்யப் பட்டிருக்கிறதே. அதுபோல நம்முடைய தமிழகத்திலும் ஏற்பாடு செய்ய முன்வருவார்களா? அரசாங்கமே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவாக் குறிப்பு இல்லை. அப்படிச் செய்வதாக இருந்தால் அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்பது அடுத்ததாகக் கவனிக்க வேண்டிய ஒன்று.

காஞ்சிபுரம் புற்றுநோய் நிலையம்.

* 211 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள்–நல்வாழ்வுத் துறை அமைச்சர் கயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு அரசு காஞ்சிபுரத்தில் புற்றுநோய்த் தடுப்புத் திட்ட நிறுவனத்தை உருவாக்கி வருகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தமிழக அரசு 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணு நினைவு புற்றுநோய் நிலையத்தை அமைத்து புற்றுநோய் கட்டுப்பாடு முன்னோடி திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.